**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 202 / 2013**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ரவி | **வயது** | : | 48 /2026 |
| **தந்தை பெயர்** | : | சாத்தையா | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | வல்லம்பக்காடு | **தொழில்** | : | விவசாயம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**A3, A4 absent. A1, A2, A6, A8 present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 21.01.2026**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்:**

1. இவ்வழக்கின் இரண்டாவது லட்சுமி அவரது மகனும் எங்கள் தரப்பினர் மீது புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தனர் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால், சரிதான். நான் அந்த சமயத்தில் ஊரில் இல்லை. இந்த வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று எனது தரப்பினர் எதிரியினர் தரப்பினரை தாக்கியதாக நாகுடி காவல் நிலையத்தில் ஒரு புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு மாண்பமை நீதிமன்றத்தில் STC 475/2017 இன் கீழ் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், சரிதான். அந்த வழக்கில் நானும் ஒரு எதிரி ஆவேன் என்றால், சரிதான்.

2. நானும், எனது தரப்பினரும் எதிரிகளை தாக்கி காயப்படுத்தியதால் அது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டால் அந்த வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும் என்ற நோக்கத்தில் இந்த வழக்குக்கான புகாரினை அ.சா.1 நாகராஜ் என்பவர் கொடுத்துள்ளார் என்றும், அவ்வாறு பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரினை முறையாக விசாரிக்கமால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சரியான புலன் விசாரணை இன்றி இந்த எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் இருந்து 7 நாள்கள் கழித்து தான் ஊரில் இருந்து வந்தேன் என்றால், சரிதான். என்னை போலிஸ்சார் இந்த வழக்கு சம்பந்தமாக எப்போதாவது விசாரணை செய்தார்கள் என்றால், இல்லை.

3. போலிஸ்சார் என்னை எங்கு வைத்து, எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போலிஸ்சார் விசாரணையில் சொன்னவைகளா என்றால்,

ஆமாம். போலிஸ் விசாரணையில் இந்த வழக்கில் நான் முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்துள்ள விவரங்களை மட்டும் தான் தெரிவித்தேனா என்றால், ஆமாம். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளவாறு வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

4. நான் சொல்லியுள்ளது போல் எதிரிகள் எனது வீட்டிற்க வரவோ, எனது தாயாரையும், எனது அண்ணியை தாக்கவோ இல்லை எனவும், இந்த வழக்கின் உடைய புகார்தாரர் பட்டியல் சாட்சியலில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் எனது குடும்பத்தார்கள் அனைவரும் எதிரிகள் தரப்பினர் மீது கொண்டிருந்த சொத்து தொடர்பான முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு புகாரினை பொய்யாக கொடுக்க செய்துள்ளனர் என்றால், சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/−எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**